# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | O.S.NO.125/2016 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | பி.சா- 01 ( DW-01 ) |
| பெயர் | :- | அன்பழகன் த/பெ. கண்ணப்பன் |
| தேதி | :- | 17-08-2026 |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை**

இந்த வழக்கை நான் தாக்கல்செய்யவில்லை. இந்த வழக்கில் நான் எதிர்வழக்குரை தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். என் தாயார் தாக்கல்செய்துள்ளார். என் தாயார் நல்ல உடல்நிலையுடன் பேசும் நிலை -யுடன் உள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நடவடிக்கைகளில் என் தாயார் நீதிமன்றத்திற்கு வந்துசென்றார் என்றால் இல்லை. 03 ஆண்டுகளாக வரவில்லை. என் தாயார் நல்ல உடல்நிலை மற்றும் மனநிலையுடன் உள்ளார் என்றும் நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியம் அளித்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க என் தாயார் எனக்கு பகர அதிகார பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. இந்த வழக்கில் என் தாயார் எதிர்வழக்குரையில் என்ன சொல்லியுள்ளார் என்று எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். சொத்து எங்களுக்குதான் என்று சொல்லி -யுள்ளார். ஜெயா தரப்பினருக்கும் எங்களுக்கும் பிரச்சனை என்று சொல்லியிருக்கிறார். வெள்ளை காகிதத்தில் போலியாக ஆவணம் தயாரித்து

நாங்கள் வீடு கட்டுவதை நிறுத்திவிட்டார் என்று சொல்லியுள்ளார். புல எண் விவரங்கள் சொல்ல முடியுமாக என்றால் புல எண் 289/11. அதன் பரப்பளவு 2397 சதுரடி. எத்தனை சென்ட் என்று எனக்குத் தெரியவில்லை. பத்திரத்தில் சதுர அடி கணக்குதான் உள்ளது. பத்திரத்தில் 34 சென்ட் என்று உள்ளது என்று சொன்னால் அது தவறு.

சொத்தின் நான்கெல்லை விவரம் எனக்குத் தெரியும். கிழக்கு பக்கத்தில் 15 அடி சாலை. வடக்கு பக்கம் பஞ்சாயத்து சாலை. மேற்கு பக்கத்தில் புல எண் 289/10-இல் அடங்கிய இடம். தெற்கு பக்கம் லட்சுமி அம்மாள் நிலமும் 12 அடி பாதையும் உள்ளது. நான் சொன்ன நான்கெல்லை விவரங்கள் தவறு என்று சொன்னால் சரியல்ல.

எனது தாயாருக்கு 80 வயது இருக்கும். என்னுடன்தான் வசிக்கிறார். வழக்குச் சொத்திற்கும் நாங்கள் குடியிருக்கும் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் குடியிருக்கும் வீட்டிற்கு அருகில்தான் வழக்குச் சொத்து உள்ளது. நான் ஏற்கனவே சொன்ன சாட்சியத்தில் வழக்குச் சொத்திற்கும் எங்கள் வீட்டிற்கும் இடையே ஒரு பரலாங்கு தூரம் இருக்கும் என்று சொல்லி -யுள்ளேன் என்றால் இல்லை.

வழக்குச் சொத்துக்கள் சம்மந்தமாக தாக்கல்செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரியல்ல. நான் 1981-ஆம் ஆண்டு பிறந்தேன். நான் தாக்கல்செய்துள்ள ஆவணங்கள் யாவும் நான் பிறப்பதற்குமுன் ஏற்பட்டவை என்றால் சரிதான். என் தாயார் சொல்லி தெரியும். அந்த ஆவணங்கள் நிறைவேற்றப்பட்டது எனக்கு நேரடியாக தெரியாது. நான் தாக்கல்செய்துள்ள ஆவணங்கள் யாவும் என் பெயரில் இல்லை என்றால் சரிதான்.

வாதி தரப்பு ஓ1-ஆம் சான்றாவணத்தை யார் நிறைவேற்றியது யார் சான்றொப்பம் இட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது. என் தாயார் நல்ல நிலையில்தான் உள்ளார் என்று உடல்நிலை சரியில்லாமல் உள்ளார் என்று நான் பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்குச் சொத்திற்கும் எனக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் தாக்கல்செய்துள்ள ஆவணங்கள் இந்த வழக்கிற்கு தொடர்பற்றவை என்றால் சரியல்ல. வழக்குரையில் கோரியுள்ளபடி நிவாரணம் பெற வாதி உரிமையுடையவர்கள் என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi, B.L.,
Additional District&Session Judge,
Salem.